

FREE EDITION

March - 2017

# ஜோதி

Jothi

Spiritual Newsletter

ஜோதி 11 : சுடர் 01 - 121

ஆன்மிகச் செய்திச்சுடர்

## மூல மந்திரம்

ஓம் சக்தியே பராசக்தியே!
ஓம் சக்தியே ஆதி பராசக்தியே!
ஓம் சக்தியே மருவூர் அரசியே!
ஓம் சக்தியே ஓம் விநாயகா!
ஓம் சக்தியே ஓம் காமாட்சியே!
ஓம் சக்தியே ஓம் பங்காரு காமாட்சியே!
*

## பாதபூஜை மகிமை

இறைவியின் திருவடியை அடைய ஒரு குரு தேவை. அந்த குருவிற்குப் பாத பூஜை செய்வதோ மிகவும் சிறப்பானது. அதிலும் மேல்மருவத்தூர் திருத்தலத்தில் அந்த ஆதிராசக்தி இறைவியே குருவின் உருவில் நடமாடி, நம்மைக் காத்து வருகின்றாள். அந்தக் குருவின் உருவிலுள்ள அந்தத் தெய்வத்தின் திருப்பாதங்களைத் தொட்டுப் பாத பூஜை செய்வது என்பது மிகவும் மகத்தானது. அந்தத் திருவடிகள் தேவாதி தேவர்களும் வணங்கும் திருவடி! சித்தர் பெருமக்கள் வணங்கும் சீரிய திருவடி.

ஒருவன் இவ்வுலகில் பிறக்கின்றபோது அவன் இந்த நட்சத்திரத்தில் இத்தனாவது பாதத்தில் பிறந்தான் என்று கூறுவது உலக இயல்பு. அப்படிப்பட்ட 27 நட்சத்திரங்களையும் தன் பாதத்தில் அடக்கி ஆளுகின்ற நம் அன்னை தன் பாதத்தை பூஜிக்கும் பக்தனின் துயர் அறிந்து அவனுக்கு அருள் பாலிக்கின்றாள்.

பாதபூஜைக்காக வைக்கும் காணிக்கையைத் தர்ம காரியங்களுக்குப் பயன்படுத்துகின்றாள். பாதபூஜை செய்தவர்களின் வினையைப் போக்க அவனையும், அறியாமல் இப்படி தர்ம காரியங்களில் ஈடுபடுத்தி அவனுடைய வினையைப் போக்கி அவனுக்கு நல்லருள் புரிகின்றாள்.

இத்துணை நன்மைகளைத் தரும் குரு பாதபூஜை அனுதினமும் சித்தர் பீடத்தில் நடைபெறுகிறது.

(தொடர்ச்சி…..11ஆம் பக்கம்)

### ஆன்மிககுரு அருள்திரு அம்மா அவர்களின் 77ஆவது அவதாரத் திருநாள்

3.3.2017





## அம்மாவின் ஆன்மிக உலகில் பெண்கள் மேம்பாடு

மேல்மருவத்தூர் அருள்மிகு ஆதிபராசக்தி சித்தர்பீடம் ஆன்மிக உலகில் ஒரு அதிசயம். ‘இது முடியுமா?’ என நினைக்கும்போது அதை நடத்திக் காட்டி ஒவ்வொரு ஆன்மிக அன்பரையும் ஈர்த்து வரும் அற்புதமான திருத்தலம் மருவூர். இந்த அற்புதங்களையெல்லாம் நிகழ்த்திக்காட்டி அருள்மிகு ஆதிபராசக்தியின் அளப்பரிய அருட்பெருங்கருணையை, மகாசக்தியை விளக்கும் சாட்சியாய் பிரமாண்டமாய் நம் கண்முன்னே எளிமையோடு உலவி வரும் அருட்குரு அம்மா அவர்கள் சித்தர்பீட நாயகர்.

சக்தி க. அருள்மொழி - இ.ஆ.ப.

‘மனத்தை ஒருமுகப்படுத்த வேண்டி ஒரு கல்லை வைத்து உருவம் தந்து வணங்கினார்கள். இன்றைக்குப் பாமர மக்களும் அடிமட்டத்தில் உள்ளவர்களும், பெண்கள் சமுதாயமும் ஆன்ம முன்னேற்றம் பெற வேண்டி அடிகளாரையே குருவாகவும், தெய்வமாகவும் உங்களுக்குக் காட்டிக் கொடுத்திருக்கிறேன். புரிந்து கொள்வதும், பற்றிக்கொள்வதும் உங்கள் பொறுப்பு”என்பது அம்மாவின் அருள்வாக்கு.

(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)

அன்னையின் அருள்வாக்கு:

**சீராக இருக்க வேண்டும்:**

**“அன்பு, பண்பு, பாசம் இருக்க வேண்டும். அவை மணியில் கோத்தது போலச்சீராக இருக்க வேண்டும்.”**

## “ஜோதி”

- ஆன்மிக செய்திச்சுடர்

ஜோதியில் வெளிவரும் ஆக்கங்கள் மூலக்கருப் பொருளான ஆன்மிககுரு அருள்திரு அம்மா உலகுக்குத் தந்த இலகுவழி ஆன்மிகம், மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி அறநிலையின் வெளியீடான ‘சக்தி ஒளி’ மற்றும் ஆலயம் சார்ந்த ஆக்கங்கள், சக்திகளின் அனுபவங்கள் என பல்வேறு ஆக்கங்களிலிருந்து பெறப்பட்டவையாகும்.
மேற்படி ஆக்கங்கள் தொகுக்கப்பட்டு இலகு வழியாக மக்களிடம் சென்று அடையும் பொருட்டும், அம்மாவின் ஆன்மிகத்தை மக்களிடையே பிரச்சாரம் செய்யும் வகையிலும் சிறு தொண்டாகவே மேற்கொள்ளப் படுகிறது என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகிறோம்.

முகநூல்(Facebook) சமூக வலைய இணையத்தளத்தினுடாக ”ஜோதி” ஆன்மிகச் செய்திச்சுடர் மாத இதழை தரவிறக்கம் செய்யலாம்.

Search by:
www.facebook.com/jothi.sudar.7


## செய்திச்சுடரில்...


அம்மாவின் ஆன்மிக உலகில் பெண்கள் மேம்பாடு
Page: 1 – 3

நான் டாக்டரா? அடிகளார் டாக்டரா?
Page: 13 - 15

UPCOMING EVENTS
Melbourne: 4, 7, 10
Sydney: 3, 5

திருமதி அம்மா பதில்கள்
பக்கம்: 14

அருள்வாக்கும் அனுபவங்களும்...
பக்கம்: 7 – 8

Divine Miracles
Page: 16

சித்தர்பீட விழாக்கள்
பக்கம்: 17

ஆன்மிக நாட்குறிப்பு
பக்கம்: 18


# அம்மாவின் ஆன்மிக....

(1ஆம் பக்க தொடர்ச்சி)

பிற திருக்கோவில் வழிபாட்டு முறைகளிலிருந்து சற்று மாறுபட்ட வழிமுறைகளை இங்கு மட்டுமே காண முடியும். எடுத்துக்காட்டாகச் சொன்னால் இங்கு ஆன்மிக அன்பர்களாலேயே சித்தர்பீட வழிபாடுகளை அருட்குரு அவர்கள் நெறிப்படுத்தியபடி “தொண்டாக”ச் செய்து வருவதை விந்தையெனில் வியப்பில்லை. மருவூர் சித்தர் பீடத்தில் ‘தொண்டு’என்பது பெரிதாகப் போற்றப்படுகிறது.

“கருவறையில் தொண்டு செய்யும்போது நீ என்னிடம் வருகிறாய். கழிவறையில் தொண்டு செய்யும்போது நான் உன்னிடம் வருகிறேன்”என்பது அம்மாவின் அருள்வாக்கு. சாதி, மத, இன, மொழி மற்ற வேறுபாடுகளின்றி அனைவரும் கருவறைக்கே சென்று வழிபடும் முறை ஆன்மிக உரிமையாகச் செய்திருப்பது புதுமை. அதிலும் குறிப்பாக மகளிர் அனைத்து வழிபாட்டு முறைகளிலும் பங்கேற்கச் செய்திருப்பது புதுமை. அதிலும் குறிப்பாக மகளிர் அனைத்து வழிபாட்டு துறைகளிலும் பங்கேற்கச் செய்திருப்பதும், இன்னும் ஒரு நிலை மேலே சென்று பெண்களே முன்னிலை வகித்து வழிபடும் முறைகள் வேறு எங்கும் காணக் கிடைக்காதது.

பொதுவாக சமய வரலாற்றிலும் இலக்கியங்களிலும் ஆடவர்களே முக்கியமாகப் பேசப்படுவதைக் காண்கிறோம். சைவ, வைணவ சமயங்களில் திலகவதியார், காரைக்காலம்மையார் போன்ற திருப்பேறு பெற்றவர்கள் போற்றப்படுவது அங்கொன்றும் இங்கொன்றுமாய்க் காணக் கிடைக்கிறது. மணிமேகலை போன்ற பெண் துறவியையும் இலக்கியங்களில் காணலாம். எனினும் ஆன்மிக தளத்தில் குறிப்பாக வழிபாட்டு நெறிமுறைகளில் பங்கேற்கும் நிலையில் பெண்களை வைத்துப் பார்ப்பது அரிதிலும் அரிது.

இந்நிலையில் ஆன்மிககுரு அம்மா அவர்கள் பெண்மைக்கும் தாய்மைக்கும் தரும் உயர்வு நெகிழ்ச்சியோடு போற்றத்தக்கது. “எந்த ஆன்மிகவாதியும் அடிகளார் போலப் பெண்களை ஆன்மிகத்தில் ஈடுபடுத்தியதில்லை. பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறேன்.

எந்த யுகத்திலும் தொழில்துறையிலும், அரசியல் துறையிலும், நாட்டு நடப்புத் துறையிலும், ஆன்மிகத் துறையிலும் இதுவரை பெண்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. பெண்களால் எதையும் செய்ய முடியும். சாதிக்க முடியும் என்பதை உலகிற்குக் காட்ட வேண்டியே பங்காரு தெய்வம் பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறது” என்பது அருள்வாக்கு. (69ஆவது அவதார மலர்)

இதற்கான மூல காரணத்தை அன்னையின் அருள்வாக்கிலேயே வெளிப்பட்டிருப்பது வியப்பில் ஆழ்த்துகிறது. அம்மா அவர்களின் அவதார நோக்கம் என்ன என்பதனை கீழ்க்கண்ட அருள்வாக்கால் உணரலாம்.

“தெய்வ நம்பிக்கை, தெய்வ பக்தி, ஆன்மிக உணர்வுகளை ஊட்டவே இந்த அவதாரம்.

பெண் குலத்தை ஆன்மிக வழியில் உணர்வுபடுத்தவே இந்த அவதாரம்.

அடித்தளத்து மக்களை ஆன்மிக வழியில் உயர்வுபடுத்தவே இந்த அவதாரம்”.

(தொடர்ச்சி...3ஆம் பக்கம்)


# Sydney - Mandrams - Upcoming Events – March 2017



**மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி சென்டர்**

**Melmaruvathur Athiparasakthi Sithar Peeta Sydney Centre**

Contact: 02-97643872, 0416217317



**Weekly Prayers - Every Friday: 7.30p.m. – 9.00p.m.**

Homebush High School (Gymnastic Hall)
Bridge Road, Homebush 2140

**ஆன்மிககுரு அருள்திரு அம்மா அவர்களின்**

**77ஆவது**

## அவதாரத் திருநாள் பெருவிழா



**03.03.2017**

**7.30pm -9.30pm**

| | | | |
|---|---|---|---|
| 10.03.2017 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 12.03.2017 | SUNDAY– ஞாயிறு | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja “பௌர்ணமி விளக்குப் பூஜை” |
| 17.03.2017 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 24.03.2017 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 31.03.2017 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

## அம்மாவின் ஆன்மிக....

(2ஆம் பக்க தொடர்ச்சி)

இந்த நூற்றாண்டில் பெண்மையை மதித்து, பெண்களை உயர வைத்து “ உங்களுக்கும் ஓர் இடம் கருவறையில் உண்டு, இல்லை உங்களுக்கே என் கருவறையில் நிறைய இடம் உண்டு” என்று அருளிப் பெண்ணாகப் பிறந்துவிட்டோமே என்று அங்கலாய்க்கிற பெண்களைத் தெம்பூட்டி வரவழைத்து வாழவைக்கும் நமது திருக்கோயில் கருவறைதானே! இது இந்த நூற்றாண்டில் மௌனப் புரட்சி” என்று தருமபுர ஆதினப்புலவர் பேராசிரியர் முனைவர் மு.சிவச்சந்திரன் அவர்கள் நெகிழ்ச்சியோடு குறிப்பிடுகிறார். (70ஆவது அவதார மலர் 2010)

அருட்பிரகாச வள்ளலார் கண்ட காலச் சூழலில் ஆன்மிக தளத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே நிலவி வந்த பேதங்களை நன்கு அறிந்திருந்தார். அப்பேதங்கள் ஆன்மநேய வளர்ச்சிக்குத் தடையாகிவிடுமோ என்றெண்ணி முதன்முதலாக அதைக் களைந்தெறிய வள்ளலார் குரல் ஒலிப்பதைக் கீழே காணலாம்.
“பெண்களுக்கு யோகம் முதலிய சாதனங்கள் அவசியம் கற்பிக்க வேண்டும். மேலும் பேதம் அபேதமற்றுப் படிப்பு முதலியவையும் சொல்லிக் கொடுக்க வேண்டும். தத்துவம் முதலியவற்றில் சொரூப போதிகளைத் தெரிவித்து சரளமாக்கினால் பின் தடையின்றி நம்முடைய துரிய ஆசிரம காலத்தில் ஒத்திருப்பார்கள்.” உபதேசக் குறிப்பு (112).

ஒரு நூற்றாண்டுக்குப் பிறகும் சமுதாய மறுமலர்ச்சியில் பெண்களுக்கான சமஉரிமை நிலைநாட்டப் பெற்றாலும், ஆன்மிக தளத்தில் மகளிருக்குரிய மாண்பு மறுக்கப்பட்டே வந்தது. இக்காலகட்டத்தில் சம உரிமை என்ற நிலையும் கடந்து கருவைத் தாங்கும் பெருமை கொண்டோர் (ஆலய) சித்தர்பீடக் கருவறைக்கே சென்று வழிபடவும், சித்தர் பீட வழிபாட்டு முறைகள் அனைத்திலும் மகளிரை முன்னிலைப்படுத்தி உள்ள நெறிமுறைகள் நெஞ்சார்ந்த நன்றியோடு நாளும் போற்றத்தக்கது. தாயுள்ளத் தூய்மையோடு தாய்மையைச் சிறப்பித்த பங்காரு பாலகரை அம்மா என்றழைப்பது எவ்வளவு பொருத்தமாக உள்ளது! இது ஆன்மிககுருவின் மௌனப் புரட்சி என்றாலும் அருட்கொடை என்றாலும் மிகையாகாது.
ஓம் சக்தி!

# Melbourne - Mandrams – Upcoming Events – March 2017

**Melmaruvathur Swayambu Arulmihu Athiparasakthi Vaara Valipaattu Mandram**
**மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம்**
(Reg. No. 2193)
**விக்டோரியா – அவுஸ்திரேலியா**

P.O.Box: 5217, Clayton, Victoria 3168, Australia - E-mail: melbourne.mandram@gmail.com
Contacts / மன்ற தொடர்புகளுக்கு: 0433440194 - Facebook : : https://www.facebook.com/MM2193

**கூட்டு வழிபாடுகள்:**

**Clarinda – வெள்ளி - Friday:**
**Melaleuca Activity Hub,**
31 Melaleuca Drive
Clarinda 3169
(Mel.Ref.: 78 K 3)

**Dandenong - ஞாயிறு – Sunday:**
**Latham Crescent Centre**
Cnr of Latham Cr. & Deakin Cr.-
Dandenong3175
(Mel.Ref.: 90 C 01)




| | | | | |
|---|---|---|---|---|
| Dandenong - 05.03.2017 | Sunday | மாசி | 21 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |
| Clarinda - 10.03.2017 | Friday | மாசி | 26 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 12.03.2017 | Sunday | மாசி | 28 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |
| Clarinda - 17.03.2017 | Friday | பங்குனி | 03 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 19.03.2017 | Sunday | பங்குனி | 05 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |
| Clarinda - 24.03.2017 | Friday | பங்குனி | 10 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 26.03.2017 | Sunday | பங்குனி | 12 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |
| Clarinda - 31.03.2017 | Friday | பங்குனி | 17 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |

12.03.2017 – ஞாயிறு - பௌர்ணமி, 27.03.2017 – திங்கள் - அமாவாசை

# Sydney - Mandrams - Upcoming Events – March 2017



**Melmaruvathur Swayambu Arulmihu Annai Athiparasakthi Sitherpeedam NSW Mandram (Australia)**

Contact: 02-96420519, 0439686452



**Every Friday : 7.30p.m. – 9.30p.m.**

Westmead Public Primary School
Moree Street – Westmead

| | | | |
|---|---|---|---|
| 03.03.2017 | FRIDAY – வெள்ளி 7.30p.m. – 9.30p.m. |  | ஆன்மிககுரு அருள்திரு அம்மா அவர்களின் 77ஆவது **அவதாரத் திருநாள் பெருவிழா** பாதபூஜை-கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 10.03.2017 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 12.03.2017 | SUNDAY– ஞாயிறு | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja "பௌர்ணமி விளக்குப் பூஜை" |
| 17.03.2017 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 24.03.2017 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 31.03.2017 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

## அன்னையின் வேள்விகளும் அற்புத அனுபவங்களும்

## வேள்விப்பூசைகளின் மகத்துவம்

### வழிபாட்டுச் சடங்குகள்

பெரும்பாலான சமயங்கள் தமக்கென சில வழிபாட்டுச் சடங்குகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளன. சில அடையாளங்களையும், குறியீடுகளையும் கொண்டதாக இச்சடங்குகள் அமைந்துள்ளன.

இந்து சமயத்தில் மூன்று வகையான வழிபாட்டு முறைகள் பொதுவாக இருந்தன. 1) வேத மரபைத் தழுவிய வைதிக முறை 2) திராவிடர்கள் மரபைத் தழுவிய ஆகம முறை 3) பழங்குடி மக்கள், சித்தர்கள், யோகிகள் மேற்கொண்ட தாந்திரிக முறை.

### வைதிக முறை – வேள்விப் பூசைகள்

ஒரு வேள்விக்குண்டம் அமைத்து, தெய்வங்களை வேண்டிக்கொண்டு, அவற்றுக்குரிய மந்திரங்களைச் சொல்லி, அக்கினி வளர்த்து, அத்தெய்வங்கட்குரிய படையல்களை வேள்விக் குண்டத்தில் ஆவுதியாக அளிப்பது வைதிக முறை.

### ஆகம முறை

ஒரு தெய்வ விக்கிரகத்தை நிறுவி, தோத்திரங்கள் சொல்லி, மலரிட்டு அர்ச்சனை செய்வது ஆகம முறை.

### தாந்திரிக முறை

சக்கரங்கள், மண்டலங்கள், நியாசங்கள், முத்திரைகள், மந்திரங்களுடன் தெய்வங்களை வழிபடுவது தாந்திரிக முறை.

ஒரு காலத்தில் இவை தனித்தனியாகப் பின்பற்றப்பட்டு வந்தன. காலப்போக்கில் மூன்றும் ஒன்றுடன் ஒன்று கலந்துவிட்டன.
இன்று திருக்கோயில் கும்பாபிடேகங்களிலும், திருக்கோயில் வழிபாட்டிலும் மேற்கொண்ட மூவகை வழிபாட்டு முறைகளும் கலந்தே உள்ளன.

வேத வேள்வியில் ஒரு காலத்தில் மிருகங்கள் பலியிடப்பட்டன. சோமபானம், சுரபானம் என்ற போதைதரும் பானங்கள் பயன்படுத்தப்பட்டன.

(தொடர்ச்சி…6ஆம் பக்கம்)

# வேள்விப்பூசைகளின்...

அன்னை ஆதிபராசக்தி இந்த அவதார காலத்தில், பண்டைய வேள்விகளில் இருந்த தகாத அம்சங்களை நீக்கி, இந்த யுக தர்மத்துக்குக்குத் தக்கபடி வேள்விப்பூசை முறைகளைக் கற்றுத் தந்து அறிமுகப்படுத்தினாள். அது மட்டுமன்றி வேள்விகளின் மகிமையைத் தன் பக்தர்கட்கும் தொண்டர்கட்கும் புரிய வைத்தாள்.

## ஒவ்வொரு விழாவையொட்டியும் வேள்வி

நம் சித்தர் பீடத்தில் எந்த ஒரு விழா நடந்தாலும், ஒவ்வொரு விழாவின்போதும் வேள்வி நடத்தப்படுவது உண்டு.

சித்திரைப் பௌர்ணமி விழாவின்போது மிகப் பெரிய அளவில் கலச விளக்கு வேள்விப் பூசை நடத்துமாறு பணியிடுவாள். அந்த வேள்வியில் இடம் பெறும் கலச விளக்குகளை வாங்கிச் சென்று, வீட்டின் பூசையறையில் வைத்து வழிபட்டு வருமாறு கூறுவாள்.
ஒவ்வொரு ஆண்டும் கலசம், விளக்கு வாங்கிச் சென்று பூசை செய்யுமாறு அன்னை கூறுவாள். ஒரு முறை அன்னை குறிப்பிட்டாள்.

"ஒவ்வொரு ஆண்டும் கிரகங்களின் போக்கில் மாறுதல்கள் ஏற்படுகின்றன. ஒவ்வொரு கிரகத்துக்கும் அவரவர் இன்ப துன்பங்கட்கும் தொடர்பு உண்டு. அவரவர் ஊழ்வினைக்கும் தொடர்பு உண்டு. அவரவர் கைரேகைகளில் ஏற்படும் மாற்றங்களை வைத்து இவ்வுண்மையை அறியலாம்.
எனவே, அவ்வப்போது மாறிவரும் கிரக நிலைகட்கு ஏற்ப, இங்கு வேள்வி செய்யப்படுகிறது. எனவே, ஒவ்வொரு வேள்வியிலும் கலந்துகொண்டு கலச விளக்கு வாங்கிச் சென்று பூசை செய்! உள்ளுணர்வோடு செய்யும் பூசைக்கேற்ப உன் பாவச் சுமை குறையும்" என்று அன்னை சொல்லிக்காட்டினாள்.

## வேள்வியின் பயன்கள்

1. புகை, ஜோதி, நீர்த்துளி, காற்று இவற்றின் சேர்க்கையே மேகம். இந்த நான்கின் சேர்க்கை இருந்தால் மட்டுமே மழை பொழியும். இந்த நான்கையும் ஒரு சேரக் கூட்டுவிக்கும் சக்தி வேள்விக்கு உண்டு என்கிறார் கவி காளிதாசர். சமணத்துறவிகளும், சமண மதத்தாரும் ஒரு காலத்தில் வேள்விப் பூசைகளை நிந்தை செய்து வந்தனர். ஆயினும் சிலப்பதிகாரம் பாடிய சமணத்துறவி இளங்கோ அடிகள், வேள்விச்சாலை பற்றி ஓரிடத்தில் குறிப்பிடும்போது, "மழைக்கரு உயிர்க்கும் அழல் திகழ் அட்டில்"என்கிறார். சாதாரண மேகங்களை, சூழ்கொண்ட மழை மேகங்களாக மாற்றும் சக்தி படைத்த யாகசாலை"என்று பொருள். இதிலிருந்து தெரிவது என்ன? வேள்விப் பூசையால் மழையைக் கொண்டு வரலாம் என்று தெரிகிறது அல்லவா?
2. வேள்விகள் மூலமாகத் தனி மனிதனுக்கும் நன்மை கிடைக்கிறது. சமுதாயத்திற்கும் நன்மை கிடைக்கிறது. உலகத்திற்கும் நன்மை கிடைக்கிறது.
3. அண்டங்களில் ஏதோ சில பகுதிகள் திருத்தம் அடைகின்றன.
4. "இந்த யாகத்தின் மூலமாக இந்தப் பூலோகத்தையும் வான மண்டலத்தையும் சுத்தப்படுத்துவேனாக"என்று ரிஷி ஒருவர் ரிக் வேதத்தின் பாடல் ஒன்றில் கூறுகிறார். ஆதலின் வேள்விப் பூசைகளால் வான மண்டலம் சுத்தப்படுத்தப்படுகிறது.
5. சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு வேள்விப் பூசையும் புகையும் உதவுகின்றன.
6. உடல் நோய்களை வேள்விப்பூசை நீக்குகிறது.
7. வேள்விகள் மூலமாகத் தெய்வ சக்திகள் திருப்தி அடைகின்றன. பசியாறுகின்றன. ஊட்டம் பெறுகின்றன.
8. அசுர சக்திகள், தீய சக்திகளின் ஆதிக்கம் கட்டுப்படுத்தப்படுகிறது.
9. வேள்விப்பூசைகள் மூலம் தெய்வ சக்திகட்கும் மனித குலத்திற்கும் பரஸ்பர உதவிகள் பரிமாறப்படுகின்றன.
10. கோள்களின் சுழற்சியால் ஏற்படும் தீய விளைவுகளின் பாதிப்பைத் தடுக்க யாகங்கள் உதவுகின்றன.
11. வீட்டைச்சுற்றிக் கலச தீர்த்தம் தெளிப்பதன் மூலம் அவரவர் குடும்ப ஊழ்வினை நீங்குகிறது.
12. வேள்விப்பூசையில் வைக்கப்பட்ட விளக்குகளை வீட்டில் ஏற்றி வழிபடுவதால் லட்சுமிகரம் வந்து வாய்க்கிறது.
13. ஏவல், பில்லி, சூனியத் தொல்லைகள் நீங்க வேள்விப்பூசைகள் உதவுகின்றன.
14. தனிமனிதனின் உடல், மனம், ஆன்மா இவற்றுக்கு அளவற்ற நன்மைகள் கிடைக்கின்றன.

ஓம் சக்தி!

புதிய பரிணாம வளர்ச்சியில் ஆதிபராசக்தி இணையத்தளம்

ஆன்மிக விடைதேடும்
அதிக பக்தர்களின் மனதைக்கவர்ந்த

www.adhiparasakthi.co.uk ஆதிபராசக்தி இணையத்தளம்

"ஜோதி" ஆன்மிகச் செய்திச் சுடரை www.adhiparasakthi.co.uk என்ற இணையத்தளத்தின் ஊடாக பதிவிறக்கம் செய்து வாசித்து பயன்பெறலாம்.

ஜோதி
ஆன்மிகச் செய்திச்சுடர்

# Melbourne - Mandrams – Upcoming Events – March 2017

## Athiparasakthi Mandram Melbourne Australia (AMMA)

Contact: +61 451 374 878, +61 433 326 620

contactus@supremesakthi.com
www.supremesakthi.com

**Joint Prayers:** Every 3rd Sunday of the month
**Thiruvilakku Poojai:** Every month on the Sunday following the Full Moon day

**Southern Community Centre,**
Rupert Drive - Mulgrave 3170 (Mel.Ref:: 80 F 5)

| | | | |
|---|---|---|---|
| 12.03.2017 | Sunday | 09.00a.m.<br>06.10p.m. | Guru, Vinayagar, Annai Pooja, Chakkaram drawing<br>"Thiru Vilakku Pooja"<br>"திருவிளக்குப் பூஜை" |

# அருள்வாக்கும் அனுபவங்களும்

## நீரில் கரைத்துவிட்ட சூனியம்

**கோவை**யில் ஒரு பஸ் கம்பெனியில் வேலை பார்த்து வந்தவர் திரு.குழந்தை வடிவேல். ஒரு நாள் வேலை முடித்துவிட்டு வீட்டிற்கு வந்தார். மறுநாள் காலை அவர் கழுத்து, முகம், நெற்றி ஆகிய இடங்களில் நீள வடிவில் தடிப்புத் தடிப்புகளாகத் தோன்றியிருந்தன. இது தோல் வியாதி எனக்கருதி பிரபல தோல் வியாதிக்கு மருத்துவம் செய்யும் டாக்டர்களிடமெல்லாம் சிகிச்சை பெற்றார். பலன் எதுவும் இல்லை, மாறாக அதிகமாகிவிட்டது.

இது செய்வினை! மருந்தால் தீராது என்று சிலர் சொல்லியதால் செய்வினை நீக்கும் மந்திரவாதிகள் பலரிடம் சென்று காட்டினார். சுமார் 5000 ரூபாய் செலவானதுதான் மிச்சம்.

நண்பர் ஒருவர் "மேல்மருவத்தூர் அற்புதம்" என்ற புத்தகம் கொடுத்தார். அதைப் படித்துவிட்டு மேல்மருவத்தூர் வந்தார்.

20.11.1981 வெள்ளியன்று மேல்மருவத்தூர் வந்தார். அன்று அருள்வாக்கு கிடைக்கவில்லை. ஆனால் அன்னையின் வேப்பிலை மந்திரிப்பு கிடைத்தது. ஏழு மாதங்களாகப் பிரபல டாக்டர்களால் தீர்க்க முடியாத தோல் அரிப்பு குணமடைந்தது. அருள்வாக்கு பெற வேண்டி இரண்டு நாட்கள் தங்கினார். ஞாயிறன்று அங்கவலம் வந்தார்.

இந்தச் செய்வினைக்கு என்னம்மா செய்யட்டும்? என்று அன்னையிடம் அருள்வாக்கில் கேட்டார். சில மருந்துகளை மட்டும் சொல்லிச் சாப்பிடச் சொன்னாள் அன்னை. அவற்றைச் சாப்பிடக் குணமடைந்து வருவதைக் கண்ட அவரது எதிரிகள் செய்வினை மூலம் வேறு சில உபாயங்களைக் கையாண்டு தொல்லை கொடுக்க ஆரம்பித்தனர். அதனால் ஒரு வாரம் கழித்து தடிப்புகள் எல்லாம் கொப்புளங்களாகி, கழுத்தைத் திருப்ப முடியாத அளவிற்கு ஆகிவிட்டது.

29.11.1981 அன்று இரவு படுக்கையில் இருந்தபடி "அம்மா! இப்படி எல்லாம் செய்து வருகிறார்களே.. அவர்கள் யாரென்று நீ சொல்லவில்லையே.." என்று மனக்குறையோடு அன்னையை நொந்துகொண்டு உறங்கிவிட்டார்.

உறக்கத்தில் ஒரு கனவு. ஏதோவொரு கோயில். கோயில் கருவறையில் முன் மண்டபத்தில் உடுக்கை ஏந்தியவாறு ஒரு அம்மன் சிலை! சிலையின் இடது கால் உடைந்திருக்கிறது. கால் உடைந்த சிலையின் கீழே இவர் உட்கார்ந்திருக்கிறார். அந்தச் சிலை இவரிடம் சொல்கிறது. "என்ன மகனே! செய்வினை செய்தவர்கள் யார் என்றா கேட்கிறாய்? உனக்கு வேண்டிய உறவினர்கள்தான். உன்னை உரிமையோடு வாடா போடா என்று அழைக்கிறார்களே! அவர்கள்தான்" என்றாள் அன்னை.

"அந்த மாதிரி உறவினர்கள் மூன்று பேர் இருக்கிறார்கள். அவர்களை அடையாளம் காட்டம்மா"! என்கிறார் இவர்.

"என்னையே பார்!" என்கிறாள் அன்னை. இவர் அந்தச் சிலையையே பார்க்கிறார். அப்போது செய்வினை செய்தவர்களின் உருவங்கள் அன்னையின் உருவத்திற்குள் கூனிக்குறுகி நின்றுகொண்டிருக்கின்றன. எப்படி? 25 வருடங்களுக்கு முன்பு அவர்கள் எப்படி இருந்தார்களோ அந்த உருவத்தில் தெரிகிறார்கள்.

"என்ன மகனே! பார்த்துக்கொண்டாயா?" என்று கேட்கிறாள் அன்னை.

"ஆமாம் தாயே! அவர்கள் உருவம் இப்பொழுது உள்ள உருவமாக இல்லையே" என்கிறார் இவர்.

(8ஆம் பக்க தொடர்ச்சி)

## அருள்வாக்கும் அனுபவங்களும்....

“மகனே! அவர்கள் 25 வருடங்களாகவே உனக்குச் செய்வினை செய்து வருகிறார்கள்” என்கிறாள் அன்னை.

“நான் வேறென்னம்மா செய்யட்டும்?” என்று கேட்கிறார் இவர்.

“நான் சொன்ன மருந்துகளை விடாமல் சாப்பிட்டுக்கொண்டு வாடா மகனே! அக்கினி நட்சத்திரத்தன்று பழனியில் மொட்டை போட்டுக்கொள்”என்று சொல்லி மறைகிறாள் அன்னை.

அதன்பின் ஒவ்வொரு அமாவாசையன்றும் அவரை நோக்கிச் செய்வினை செய்து ஏதாவது ஒன்றை ஏவிவிட்டபடி இருந்தார்கள்.

அவ்வாறு ஒரு அமாவாசையன்று அவரை நோக்கி ஒரு செப்புத் தகட்டில் முள்ளு முள்ளாகச் செய்து தகட்டின் நடுவில் நட்சத்திரம் போன்ற ஒரு சக்கரம் வரைந்து அனுப்பினார்கள். குழந்தைவேலு பயந்து போய் “அம்மா! அம்மா!” என்று கதறினார்.

அப்போதுதான் அங்கே ஒரு அதிசயம் நடந்தது.

அவரை நோக்கி விரைவாக வந்துகொண்டிருந்த சக்கரத்தை கை ஒன்று தடுத்து நிறுத்தியது. வந்த வேகத்தில் அந்தக் கையிலே மோதி, சக்கரம் வந்த திசையிலேயே திரும்பிச் சென்றது.

சக்கரத்தை நிறுத்திய அந்தக் கையில் தங்கக் காப்பும் கண்ணாடி வளையல்களும் மட்டுமே தெரிந்தன. அன்னையின் முழு உருவம் தெரியவில்லை.

5.3.1982 அன்று திரு.குழந்தைவேலு மேல்மருவத்தூர்க்குப் புறப்பட்டு வந்தார். பஸ்ஸில் வருகிறபோதே கண்களுக்குக் கீழே முகம் பூராவும் பலூன் மாதிரி வீங்கிவிட்டது. திண்டிவனம் சென்று பஸ் மாறும்போது அழுகையே வந்துவிட்டது. மருவத்தூரில் இறங்கினார். கோயிலை வலம் வந்தார். புற்று மண்டபத்தில் அப்படியே படுத்துவிட்டார். அவரது இரண்டு கைகளிலும் புண் உண்டாகி மடக்க முடியாமல், கைகளை நீட்டியபடியே படுத்திருந்தார். கழுத்தும் முகமும் வீங்கியபடியே இருந்தன.

அப்போது.. இரவு 2.00 மணி இருக்கும். யாரோ இரண்டு பேர் குழந்தைவேலு அருகில் வந்து, அவரது கழுத்திலும், முகம், கை ஆகிய இடங்களிலும் தடவிக் கொடுத்து “அச்சிறுபாக்கத்தில் ஒருவருக்கு இதே மாதிரி இருந்து, குணமாகிவிட்டது. உனக்கும் குணமாகிவிடும்”என்று சொல்லி மறைந்தார்கள். மறைந்தவர்கள் முகம் மட்டும் தெரியவில்லை. அவர்களின் கைகள் மட்டுமே தெரிந்தன. அவர்கள் ஆண் சித்தர்கள்.

அன்னையின் சித்தர் பீடத்தில் சித்தர்கள்நடமாட்டம் உண்டு. அன்னையின் அருள்நாடி வருகிற சித்தர்களைக் கொண்டும் பல அற்புதங்கள் நடக்கின்றன.

காலை 3.00 மணிக்கு எழுந்து பார்த்தார் குழந்தைவேலு. புண்கள் இருந்த இடத்தைப் பார்த்தார். புண்களில்லை. மாறாக சோப்பு நுரை காய்ந்தவுடன் எப்படியிருக்குமோ அப்படி இருந்தது. முகத்தில் இருந்த வீக்கம் மறைந்து குணமாகிவிட்டது. ஒரு மணி நேரத்தில் குணமானது அற்புதம்!

அதன்பிறகு சூனியத் தொல்லை எதுவும் இல்லை.
ஓம் சக்தி.


### ஆண்டுச்சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?

அன்னை புரியும் அற்புதங்களை உங்கள் உறவினர், நண்பர்களுக்கு இலகுவாக எடுத்துச் சொல்ல சக்தி ஒளியை பெற்றுக்கொடுங்கள்.

**சக்தி ஒளி**

**ஆன்மிக ஒளி பரப்பும் அறிவுச்சுடர்**

| தனி இதழ் | ஆண்டுச்சந்தா | ஆயள் சந்தா | வெளிநாட்டுச் சந்தா |
| --- | --- | --- | --- |
| ரூபா ₹ 15.00 | ரூபா ₹ 180.00 (இந்தியா) | ரூபா ₹ 2600.00 (இந்தியா) | இந்திய ரூபா ₹ 3500.00 (இரண்டு ஆண்டுகள்) |

ஆண்டுச்சந்தாக்களை மன்றங்களினூடாகவும் அல்லது ஆதிபராசக்தி அறநிலையத்துக்கு தொகையை அனுப்பி நேரடியாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் பெயர், விலாசம், மற்றும் நீங்கள் யாருக்கு அனுப்ப விரும்புகிறீர்களோ அவர்கள் பெயர்,விலாசம், மற்றும் இத்தனை காலத்திற்கான சக்தி ஒளி சந்தா எனும் விபரங்கள் தெளிவாக எழுதப்படல்வேண்டும்.

உரிய தொகையினை **“ஆதிபராசக்தி கல்வி,மருத்துவ, பண்பாட்டு அறநிலை”** எனும் பெயருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**Address: Editor,‘Sakthi Oli’ Office, Adhiparasakthi Sithar Peetam, Melmaruvathur 603319, Tamil Nadu, South India.**

ஆன்மிககுரு
அருள்திரு அடிகளார் அருளிய
# குரு உபதேசங்கள்



## ஆன்மிகமும் உலகியலும்

“உலகியலிலிருந்து ஆன்மிகத்தைப் பார்ப்பதற்கும், ஆன்மிகத்திலிருந்து உலகியலைப் பார்ப்பதற்கும் வித்தியாசம் உண்டு.
உலகியலிலிருந்து ஆன்மிகத்தைப் பார்ப்பது, வெளிச்சத்திலிருந்து கொண்டு இருட்டைப் பார்ப்பதற்குச் சமம்.

ஆன்மிகத்திலிருந்து கொண்டு உலகியலைப் பார்ப்பது, இருட்டிலிருந்து கொண்டு வெளிச்சத்தைப் பார்ப்பதற்குச் சமம்.
வெளிச்சத்திலிருந்து கொண்டு இருட்டைப் பார்க்கும்போது இருட்டினை மட்டும்தான் பார்க்க முடியும்.

இருட்டிலிருந்து வெளிச்சத்தைப் பார்க்கும்போது, வெளிச்சமும் தெரியும். இருட்டும் தெரியும். இருட்டிலுள்ள பொருள்களும் தெரியும்.”

## அஞ்சுக்கும் அஞ்ச வேண்டும்

“பஞ்ச பூதங்கள் ஐந்து உடம்பின் தலைப்பகுதியில் உள்ள முக்கிய கருவிகள் ஐந்து செயற்கருவிகள் ஐந்து இந்த அஞ்சுக்கும் அஞ்சி அஞ்சிக் கெஞ்சிக் கெஞ்சி நின்றால் வயிற்றுக்குக் கஞ்சியாவது கிடைக்கும்.”

## கருவறையில் பெண்கள் சலசலப்பு ஏன்?

“தான் பெற்றெடுத்து வளர்த்து ஆளாக்கிய மகன், ஏதோ சமஸ்கிருதம் படித்து விட்டுத் தன்னைப் பெற்ற தாயையே கருவறையில் வரக்கூடாது என்று மறுக்கிறான். தாய் பெரிதா? பாஷை பெரிதா? சிந்தியுங்கள்”

## பாமரனிடமும் புத்திசாலித்தனம் உண்டு

“படித்தவன் நாள் கணக்கில் ராமாயணம், மகாபாரதம் பிரசங்கம் செய்கிறான். இவையெல்லாம் கேட்டுவிட்டு, ஒரு பாமரன் ஒருவன் பெண்ணுக்கு அழுகிறான். இன்னொருவன் மண்ணுக்கு அழுகிறான். இதுதான் ராமாயணம்! மகாபாரதம்! என்று ஒரு வரியிலே, அடக்கிக் கூறி விடுகிறான். இவருள் புத்திசாலி யார்? குரு யார்?
ஏதோ பாமரன் என்று அவர்களை ஒதுக்கி வைக்கிறோம். அவர்களிடமும் புத்திசாலித்தனம் உண்டு.”

## நகரங்கள் நரகங்களாக மாறிவருகின்றன

“மக்களிடையே பாச உணர்ச்சிகள் ஓங்க வேண்டும். நாகரிகம் எட்டிப் பார்க்காத கிராமங்களைப் பாருங்கள். அங்கே மக்களிடையே இருக்கிற பரஸ்பர அன்புணர்ச்சியைப் பாருங்கள். பாச உணர்ச்சியைப் பாருங்கள். இன்றைய நகரங்களைப் பாருங்கள்.

நகரத்தில் ஒருவனை அடித்தால் ஏன் என்று கேட்பதில்லை. கிராமத்தில் அப்படியா?
இன்று நகரங்கள் எல்லாம் நரகங்களாக மாறிக்கொண்டு வருகின்றன.

கிராமங்களில் ஏழ்மையும், வறுமையும் தாண்டவமாடிக் கொண்டிருக்கின்றன. அத்தகைய கிராமங்களை நாம் முன்னுக்கு கொண்டு வர வேண்டும். படிப்படியாக கிராமங்களும் கெட்டு வருகின்றன. அரசியலும், சினிமாவும் கெடுத்துக் கொண்டு வருகின்றன.
கிராமங்களுக்கும், கிராம மக்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்து நம் தொண்டர்கள் பணியாற்ற வேண்டும். கட்சிகள் வளர்ந்த மக்களிடையே கசப்புணர்ச்சியும் குரோத உணர்ச்சியும் வளர்ந்துவிட்டன.

இனி ஆன்மிகத்தினால்தான், மக்களுக்குத் தொண்டு செய்வதன் மூலமாகத்தான் இத்தகைய கசப்புகளைப் போக்க முடியும்.
இளைஞர்களின் சக்தி பெரிது! அவர்களை ஆன்மிகத்தின் மூலம் ஆக்கப் பாதையில் செலுத்தி வர வேண்டும்.”

## அமாவாசை – பௌர்ணமி விளக்குப்பூசை பலன்கள்

**மாசி – அமாவாசை–பௌர்ணமி :**
துன்பம் அகலும். செய்த பாவங்கள் அனைத்தும் நீங்கி தூய்மை அடையலாம்.
அதன்பிறகு மனமறிந்து எந்த பாவத்திலும் ஈடுபடாமல் இருக்கத் தோன்றும்.

**பங்குனி - அமாவாசை–பௌர்ணமி:**
தரும சிந்தனையை உண்டுபண்ணும்.
உலகில் எங்கும் சமாதானமும், செழிப்பும், தர்ம நெறிகளும் தழைத்து உலக நலம் உண்டாகும்.

## Melbourne - Mandrams – Upcoming Events – March 2017



### Melmaruvathur Aadhiparasakthi Vara Valipaattu Mahalir Mandram



**Join Prayers: Every Friday 7.30p.m. – 9.30p.m.**

**Vermont South Community House,**
Karobran Drive – Vermont South 3133 - (Mel.Ref.: 62 G 7)

**03.03.2017**
**வெள்ளி**
இரவு 7.30 மணி

ஆன்மிககுரு அருள்திரு அம்மா அவர்களின்
77ஆவது
**அவதாரத்திருநாள் பெருவிழா**

| | | | |
|---|---|---|---|
| 10.03.2017 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 12.03.2017 | SUNDAY– ஞாயிறு | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja “பௌர்ணமி விளக்குப் பூஜை” |
| 17.03.2017 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 24.03.2017 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 31.03.2017 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

### Lalor

**Join Prayers: Alternatie Sundays 4.00p.m. – 6.00p.m.**
Yarra Plenty Regional Library Service (Hall adjacent to the library)
May Road - Lalor 3075 (Mel.Ref.: 8 K 6)

| | | | |
|---|---|---|---|
| 05.03.2017 | SUNDAY – ஞாயிறு | 4.00p.m. – 6.00p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 19.03.2017 | SUNDAY – ஞாயிறு | 4.00p.m. – 6.00p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

## வாழ்வும் நீயே வளமும் நீயே அம்மா!

**அ**ம்மா! என்றழைக்காத உயிரில்லையே! என்றான் ஒரு கவிஞன். என் வாழ்வில், நான் வாழ்ந்ததாகக் கணக்கில் எடுத்துக் கொள்ளும் நாட்கள் அருள்திரு அம்மா அவர்களிடம் நான் வந்து சேர்ந்த பிறகே எண்ணப்படுகின்றன.

எனக்குச் சில ஆண்டுகளுக்கு முன்பு குடலிறக்கம் ஏற்பட்டது. அப்படி குடலிறக்கம் ஏற்பட்டிருப்பதை முதன்முதலில் தெரிவித்தவர் நாகபட்டினத்தில் புகழ் பெற்ற மருத்துவர். குடலிறக்கத்திற்கு அறுவை சிகிச்சைதான் செய்ய வேண்டும் என்றார். நான் அவரிடம் அம்மாவிடம் அனுமதி பெற்று வந்து செய்து கொள்கிறேன் என்று தெரிவித்தேன்.

**சக்தி கு. பண்டரிநாதன்,** M.A, M.LIS., B.G.L. – திருவாரூர்

அம்மாவிடம் கூறி அம்மாவும் செய்யலாம் என்றால் நான் அறுவை சிகிச்சை செய்து விடுகிறேன் என்றார் அந்த மருத்துவர். அப்படியே அருள்திரு அம்மாவிடம் என் குடலிறக்கம் பற்றி கேட்டேன். “ஆபரேஷன் வேண்டாம் மருந்து கொடுக்கிறேன் அடுத்த நாள் வா!” என்றார்கள்.

வந்தபோது “பீட்ரூட், புடலங்காய், பாகற்காய், உணவில் அதிகம் சேர்த்து சாப்பிட்டு வா சரியாகிவிடும்” என்றார்கள் அம்மா.

பல வருடங்கள் கழித்து என் கவனக் குறைவால் மீண்டும் வந்தது குடலிறக்கம். இந்த முறை அறுவை சிகிச்சைதான் ஒரே வழி என்றிருந்த நிலைமையில் அருள்திரு அம்மாவிடம் அனுமதி பெற்றுக் கொண்டு அறுவை சிகிச்சை செய்துவிடலாம் என எண்ணினேன். அம்மாவைப் பார்க்கச் செல்லும் வழியில் பாண்டிச்சேரியில் இறங்கி ஆபரேஷன் செய்து கொள்ளலாமா என்றிருந்தது என் உடல் நிலைமை அவ்வளவு மோசமாக இருந்தது.

(தொடர்ச்சி…11ஆம் பக்கம்)

# வாழ்வும் நீயே...

அருள்திரு அம்மாவிடம் சென்று நிலைமையைக் கூறினேன். 'வில்வம், துளசி, வேப்பிலை, ஒரு பாகற்காயைச் சேர்த்து சாறு எடுத்து ஒரு பாலாடை அளவு ஒரு நாள் விட்டு ஒரு நாள் சாப்பிட்டு வா சரியாகிவிடும்' ஆபரேஷன் வேண்டாம் என்று எனக்கிருந்த உடல்மோசமான நிலைமையிலும் கூறினார்கள். அறுவை சிகிச்சை செய்து கொள்ளாமல் அருள்திரு அம்மா கூறியபடியே செய்து வந்தேன். இரண்டாவது முறையும் அகன்றது என் உடல்நலக்குறைவு.

சில காலம் திருவண்ணாமலையில் தங்கி இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அம்மாவிடம் ஆசி பெறச் சென்ற போது அம்மா சொன்னார்கள். "இந்தா பாரு ஒவ்வொரு வேண்டுதலை வைச்சுகிட்டு மலை சுத்திவராங்கபாரு அதைவிட நிறைய உனக்கு செய்திருக்கிறேன்" என்றார்கள். மேல்மருவத்தூரில் ஒரு தெய்வம் இருக்கும்போது நான் ஏன் அஞ்ச வேண்டும் என்று இருந்துவிட்டேன்.

அடுத்து வந்த சித்திரை பௌர்ணமி வேள்வியில் கலந்துகொண்டு வேள்விச்சாம்பலை எடுத்துத் தலையில் தேய்த்துக்குளித்துவிட்டு இங்கிருந்து போ" என்றார்கள். அம்மா கூறியபடியே செய்தேன். பிறகு ஒரு நாள் நானும் என் மகளும் அம்மாவிற்கு பாதபூஜை செயயச் சென்றோம். இருந்தும் 'நீ தனியாக பாதபூஜை செய்' என்று கூறி நான் பின்னால் இருந்து கொண்டு ஐந்து அல்லது ஆறு சக்திகள் முன்பாக என் மகளை அனுப்பி வைத்தேன். என் மகள் அருட்கூட வாசல்படியை எட்டிய உடன் அம்மா "எங்கே உன் அப்பா"? என்று என் மகளிடம் கேட்டார்கள். 'பின்னால் இருக்கிறார்கள்' என்று கூற "கூப்பிடு அவரை" என்று அருள்திரு அம்மா கூற நான் விரைந்து அம்மாவிடம் சென்றேன்.

என் மகள் வீட்டில் ஒரு நாள் நள்ளிரவில் அப்போது ஏற்பட்ட தீ விபத்தைக் கூறி உன் மகள் கருகிப்போகாமல் நான் காப்பாற்ற வேண்டி இருக்கிறது. நீ உன்பாட்டுக்கு நடந்து கொள்கிறாய்" என்று கடிந்து கொண்டார்கள்.

திருவண்ணாமலையிலிருந்து நான் ஒரு முறை பாதபூஜைக்குச் சென்றபோது "உனக்குத் தலைவர் பொறுப்பு கொடுக்கப் போகிறேன்" என்றார்கள். ஊர் திரும்பியவுடன் நாகபட்டினம் பொது மன்றத் தலைவர் பொறுப்பு எனக்குக் கொடுக்கப்பட்டது.

மீண்டும் ஒரு முறை பாதபூஜை செய்தபோது 'தஞ்சை மாவட்டத்தில் எனக்கூறி உனக்கு உரிய நேரத்தில் பொறுப்பு கொடுப்பேன்' கூறி பிரச்சாரக்குழு இணைச்செயலாளர் பொறுப்பு கொடுக்கப்பட்டது. அம்மா வழங்கிய பொறுப்பை அவளருளால் இயன்ற அளவில் செய்து வருகிறேன்.

'வாழ்வும் வளமும் நீயே' என குருவிடம் நம்மை ஒப்படைப்போம்.

# பாதபூஜை...

(முன்பக்க தொடர்ச்சி)

அந்தப் பாதபூஜை நடைபெறுகின்றபோது பலருக்கும் பல அனுபவங்கள் கிடைக்கின்றன. பல நன்மைகள் கிடைக்கின்றன. சிலருக்கு அந்தத் தீர்த்தம் அருமருந்தாகப் பயன்படுகிறது. தீய சக்திகளை அழிக்கும் வல்லமை உடையது அந்தத் தீர்த்தம்.

அந்தமான் தீவில் சுனாமி தாக்கிப் பேரழிவு ஏற்பட்டபோது அங்கு வசித்தவர்கள் சக்தி சிவராமனும் சக்தி புனிதா சிவராமனும். சிவராமன் அங்குள்ள வங்கி ஒன்றிலே மேலாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள்.

அந்தமானின் கடலோரத்தில் அமைந்திருந்த Port Blair ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றத்தைப் பேரலைகள் தாக்கியபோது, சக்திகள் வழிபட்டு வந்த அம்மாவின் படமும், பூஜை சாமான்களும் தப்பின. மற்றவை எல்லாம் அலைகளால் அடித்துச் செல்லப்பட்டன.

சிவராமன் தம்பதியினர் தங்கள் வீட்டில் ஓர் சிறப்பு வழிபாட்டிற்கு ஏற்பாடு செய்தார்கள். வழிபாட்டின்போது, அந்தமான் தீவுகளையும் அதில் வசிக்கும் மக்களையும் அழியாமல் காக்க வேண்டும் என்று அன்னையையும் நமது குருபிரானையும், அனைத்து பக்தர்களும் மனமுருகிப் பிரார்த்தித்தார்கள். வழிபாடு முடிந்தது. அவர்கள் வழிபாடு செய்த அறையை மட்டும் புகைப்படம் எடுத்தார்கள். புகைப்படத்தைக் கழுவி பிரிண்ட் போட்டபோது அவர்களுக்கு ஓர் அதிசயம் காத்திருந்தது. அறையின் நடுவில் அந்தரத்தில் ஓர் பாத பூஜை தட்டு தெரிகிறது. அதில் பாதபூஜை தீர்த்தம், மற்றும் குருபிரானுடைய சிவப்பு வேட்டியுடன் அவர்களுடைய பாதங்கள் தெரிகின்றன. இதில் ஆச்சரியம் என்னவென்றால் சிவராமன் தம்பதியினர் வீட்டில் அவ்வளவு பெரிய பாதபூஜைத் தட்டு கிடையாது என்பதுதான்.

இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால் தன் பாதபூஜைக்குத் தட்டைக் காண்பித்து நான் உங்களுடன் உறுதுணையாக இருக்கிறேன் என்று சொல்வதுபோல் தெரிகிறது என்று அவர்கள் நினைத்தார்கள்.

பெண்ணாடம் சக்தி பீடத் தலைவர் சக்தி முத்து குமாரன் இரண்டொரு மாதங்களுக்கு முன்பு நமது குருபிரானுக்குச் செய்த பாதபூஜை தீர்த்தத்தை அருந்தினார்கள். அதிசயத்திலும் அதிசயம்! பாதபூஜை தீர்த்தம் கற்கண்டாய் இனித்தது. அந்தப் பாதபூஜை தீர்த்தத்தை அருகிலுள்ளவர்களுக்கும் கொடுத்து மகிழ்ந்தார்கள். இந்தச் சம்பவங்களிலிருந்து நாம் பாதபூஜையின் முக்கியத்துவத்தையும் மகிமையையும் புரிந்துகொள்ளலாம்.

**சக்தி P.K.சுந்தரம்** - கோவை

## அன்னையின் அருள்வாக்கு

### அரசியலும் - ஆன்மிகமும்

“ஆரம்பத்தில் ஒருவன் ஒரு கட்சியில் ஈடுபடும்போது தீவிரமாக ஈடுபடுகிறான். தலைவன் உருவத்தையோ, கட்சிக் கொடியையோ, சின்னத்தையோ கையில் பச்சை குத்திக் கொள்கிறான். நாளா வட்டத்தில் கருத்து வேறுபாடு ஏற்பட்டுக் கட்சியை விட்டு விலகுகிறான். கட்சியை விட்டு விலகினாலும் கையில் குத்திக்கொண்ட பச்சை அழிவதில்லை. அதற்காகக் கையை வெட்டவா முடியும்?

ஆரம்பத்தில் என் ஆலயத்துக்கு ஆர்வமாக வந்தீர்கள். வந்ததற்கு ஒரு பயன் தருகிறேன். அடுத்த ஒன்று நடக்க வேண்டும் என்று நினைக்கிறீர்கள். நினைத்தது நடக்கவில்லை என்று வேறு ஒரு ஆலயம், வேறு ஒரு தெய்வம், வேறு ஒரு சாமியார் என்று ஓடுகிறீர்கள்.

உங்களை அறியாமல் செய்த பாவத்தால்தான் உங்களுக்கு கஷ்டங்கள் வருகின்றன. வேறு இடம் செல்வதால் மட்டும் அந்தக் கஷ்டங்கள் நீங்குவதுமில்லை. அவ்வாறு வேறிடம் செல்வதால் எந்தப் பயனும் ஏற்படுவதில்லை. இது உங்களுக்குப் புரிவதும் இல்லை.

வினைப்பயனை உரிய காலம் வரை அனுபவித்தே கழிக்க வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியவில்லை.”

# “இரத்ததானம் கொடுத்துவிட்டு வா!”

### வேம்பு

சென்னையில் உள்ள மிகப்பெரிய தனியார் மருத்துவமனை அது!

அங்கே உயிருக்கு ஆபத்தான நிலையில் நோயாளி ஒருவர் சேர்க்கப்பட்டார். உடனடியாக அவருக்கு இரத்தம் அளிக்க வேண்டும். அவர் உடம்புக்குத் தேவையான பிரிவைச் சேர்ந்த (Blood Group) இரத்தம் அந்த மருத்துவமனையில் அப்போது இல்லை.

இதுபோன்ற நெருக்கடியான நேரங்களில் வானொலி, டெலிவிஷன்களில் இன்ன பிரிவைச் சேர்ந்த இரத்தம் தேவைப்படுகிறது உதவி செய்யுங்கள் என்று அறிவிப்பு கொடுப்பது வழக்கம். அதுவரை நோயாளியின் உயிர் நிலைக்க வேண்டுமே..?

இந்த இக்கட்டான பொறுப்பில் இருந்த பெண்மனி ஒருவர் நோயாளியின் பரிதாப நிலைகண்டு வேதனைப்பட்டார். அவர் அம்மாவின் தீவிர பக்தை!

“தாயே, இந்த நோயாளிக்கு இந்தப்பிரிவைச் சேர்ந்த இரத்தம் வேண்டுமே. இரத்தம் தேவைப்படுகிற விஷயத்தை மாலை நேரத்தில்தான் வானொலி, தொலைக்காட்சிகளில் அறிவிக்க முடியும். அதுவரை இவர் உயிருக்கு ஆபத்து வராமல் நீதான் காப்பாற்ற வேண்டும் என்று வேண்டிக்கொண்டார்.”

சென்னையில் இவர் அம்மாவிடம் பிரார்த்தனை செய்த அதே வேளையில், மேல்மருவத்தூரில் அந்தப் பெண்மணியின் பிரார்த்தனைக்குப் பதில் கிடைத்தது எப்படி?

அன்று அருள்திரு அடிகளார் அவர்களைத் தரிசனம் செய்தபடி பக்தர்கள் வரிசையில் வந்து கொண்டிருக்கிறார்கள். எல்லோருக்கும் தரிசனம் கொடுத்து ஆசிர்வாதத்தை அளித்தபடி இருந்த அடிகளார், ஒரு குறிப்பிட்ட பக்தரை அழைத்தார்.

“நீ உடனடியாகச் சென்னைக்குப் போய் சென்னையில் இந்த மருத்துமனைக்குப் போ! உடனடியாகஉன் இரத்தம் தேவைப்படுகிறது. இரத்தம் கொடுத்துவிட்டு வா! என்று ஆணையிட்டு அனுப்பினார். அவரும் அப்படியே செய்துவிட்டுத் திரும்பினார்.

அந்த நோயாளிக்கு எந்தப் பிரிவு இரத்தம் தேவையோ, அந்தப் பிரிவு இரத்தம் கொண்டவர் அந்த பக்தர்.

தொலைதூரத்தில் இருந்து கொண்டு வேண்டிய அந்தப் பெண்மணியின் பிரார்த்தனையை ஏற்று நிறைவேற்றி வைத்தார் அடிகளார்.

# நான் டாக்டரா? அடிகளார் டாக்டரா?

உலக மாந்தர் பலருக்கும் பலவிதமான சந்தேகங்கள் உள்ளத்தில் தோன்றுவது உண்டு. அவற்றில் சில சந்தேகங்களுக்கு உரிய தீர்வுகளும் தெளிவும் கிடைப்பதுண்டு. ஆனால் பல சந்தேகங்களுக்கு விடையும் தெளிவும் கிடைக்காது. அந்த சந்தேகங்கள் மனதில் கிடந்து மறக்கப்படுவதுண்டு. என் வாழ்வில் மறக்க முடியாத சந்தேகங்கள் தோன்றி அவற்றிற்கு மனம் ஏற்கும் வகையில் தெளிவும் கிடைத்த சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. அது என் வாழ்வில் மிகப் பெரிய அதிசயமாகவும், அருள்திரு அம்மா அவர்களின் பேரருளுக்கும் பெருங்கருணைக்கும், தெய்வத் தன்மைக்கும் சான்றாகவும் அமைந்தது.

## உதட்டைப் பிதுக்கினார்

சுமார் ஏழு ஆண்டுகளுக்கு முன்பு எனக்கு உடல் நலம் குன்றியது. நெஞ்சு வலி வந்தது. என்னால் பேச முடியவில்லை. என் பெரியம்மா எனக்கு உடலில் வேர்வை கொட்டியதைக் கண்டு தன் முந்தானையால் துடைத்தார்கள். நான்கு பேர் என்னைக் கைத்தாங்கலாய் அழைத்துச் சென்று ஒரு அறையில் படுக்க வைத்தார்கள். எங்களுக்கு நண்பராகிய டாக்டர் ஒருவர் ஒருவர் என் நாடியைப் பிடித்துப் பார்த்துவிட்டு, என் பெரியம்மாவைப் பார்த்து நம்பிக்கை இல்லை என்பது போல் உதட்டைப் பிதுக்கினார். என் பெரியம்மாவின் கண்களில் கண்ணீர் சிந்தியது. இவற்றையெல்லாம் நான் பார்க்கிறேன். ஆனால் பேச முடியாத ஒருவித சோர்வு நிலையில் இருந்தேன்.

## பாதபூசை செய்து வருகிறேன்

நிலைமையைப் பார்த்தது உடனிருந்த நண்பர்கள் உடனே என்னைக் காரிலே இட்டு செங்கற்பட்டு மருத்துவமனைக்குக் கொண்டு சென்று சேர்த்தார்கள். இரண்டு நாட்கள் அங்கு சிகிச்சை பெற்ற பின் எங்கள் குடும்பத்துக்கு மிகவும் நெருங்கிய இதய சிகிச்சை நிபுணர் பணியாற்றும் அப்பல்லோ மருத்துவமனைக்குச் சென்றேன். அங்கு டாக்டர்கள் பல விதமான உடற் சோதனைகளைச் செய்து, இதயத்துக்குச் செல்லும் இரத்தக் குழாயில் அடைப்பு ஏற்பட்டிருக்கிறது. உடனே பைபாஸ் ஆபரேஷன் செய்ய வேண்டும் என்றார்கள்.

நான் அருள்திரு அம்மா அவர்களுக்குப் பாதபூசை செய்துவிட்டு வருகிறேன் என்று அப்பல்லோ மருத்துவமனை இதய சிகிச்சை மருத்துவர்களிடம் சொல்லிவிட்டு வந்து விட்டேன்.

## இனி உனக்கு ஒன்றும் இல்லை

அருள்திரு அம்மா அவர்களுக்குப் பாதபூசை செய்தேன். நான் அருள்கூடத்து உள்ளே நுழைந்ததும் அருள்திரு அம்மா அவர்கள், என்னைத் தலையிலிருந்து கால்வரை நிதானமாகப் பார்த்தார்கள். அவ்வாறு பார்த்த பிறகு என்னை நோக்கி "என்ன?" என்று கேட்டார்கள். நானும் அப்பல்லோ மருத்துவமனை டாக்டர்கள் கூறியவற்றைச் சொன்னேன். எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு மீண்டும் ஒரு முறை என்னைத் தலையிலிருந்து கால்வரை பார்த்துவிட்டு, இனி உனக்கு ஒன்றும் இல்லை" என்றார்கள்.

## நான் டாக்டரா? அவர் டாக்டரா?

"இனிமேல் நீ பைபாஸ் ஆபரேசன் செய்து கொள்ளத் தேவையில்லை. ஆனால் நீ பைல்ஸ் (மூலம்) ஆபரேஷன் செய்துகொள்ள வேண்டும். இதை நீ டாக்டரிடம் சொன்னால் நான் டாக்டரா? அவர் (அருள்திரு அடிகளார்) டாக்டரா? என்று கேட்பார்" எனச் சிரித்துக் கொண்டே கூறிவிட்டு, "கண்டிப்பாக பைல்ஸ் ஆபரேஷன் செய்துகொள்" என்று உத்தரவளித்தார்கள்.

## ஆயுளை நீட்டித்த அற்புதம்

அவ்வாறு சொல்லியபின் உன் வலது உள்ளங்கையைக் காட்டு என்றார்கள். என் வலது உள்ளங்கையை அம்மா முன் நீட்டினேன். உடனே அம்மா தன் விரலால் என் ஆயுள் ரேகையில் கோடு போல் தேய்த்தார்கள். அதில் குங்குமம் பட்டையாகத் தோன்றியது. பைல்ஸ் ஆபரேஷன் செய்து நான் மருத்துவமனையில் இருக்கும்போது வைத்துக் கொள்வதற்காக அம்மா இதைக் கொடுத்திருக்கிறார்கள் போலும் என நினைத்துக் கையைப் பத்திரமாக மூடிக் கொண்டேன். இதய அடைப்பினால் ஆயுள் முடிய இருந்த எனக்கு அருள்திரு அம்மா அவர்கள் மங்கலக் குங்குமத்தை என் ஆயுள் ரேகையில் தன் விரல்களால் உண்டாக்கி எனக்கு ஆயுளை நீட்டிக் கொடுத்த அற்புதம் பிற்பாடுதான் புரிந்தது.

## மருந்து சாப்பிடாதே

"நீ பைபாஸ் ஆபரேஷன் செய்து கொண்டுவிட்ட பிறகு வீட்டுக்குச் செல்லும்போது நீ வீட்டில் சாப்பிட மருந்து எழுதிக் கொடுப்பார். அந்த மருந்துகளைக் கடையில் வாங்கிக் கொள். ஆனால் அந்த மருந்துகளைச் சாப்பிடாதே" என்றார்கள்.

(தொடர்ச்சி..14ஆம் தொடர்ச்சி)



# திருமதி அம்மா பதில்கள்

- திருமதி இலட்சுமி பங்காரு அடிகளார்

அன்னையின் அருளால் அடியேனுக்குத் தினமும் தொண்டு செய்யும் பாக்கியம் கிடைத்துள்ளது. ஆனால் எங்கள் தாயாருக்குத் தொண்டுகள் பற்றிப் புரியவில்லை. "கோயில், கோயில் என்று சுத்துற.." என்று திட்டுகிறார். எதிர்காலத்தில் கணவர் என்று வருபவரும் இப்படித்தான் இருப்பாரோ.. என்று பயமாக இருக்கிறது. எனக்கு அம்மாவின் தொண்டு செய்யாமல் இருக்க முடியாது. என்ன தொண்டு செய்வது அம்மா?

தினமும் தொண்டு செய்வதில் தவறு ஏதும் இல்லை. ஆனால் அதற்கும் கால வரையறை உள்ளது. பெற்ற தாய் என்பதால் ஏதோ முழு நேரமும் தொண்டு செய்ய அனுமதிக்கிறார்கள். கணவர் என்பவர் வந்துவிட்டால் உங்களை எப்போதும் தொண்டு செய்ய அனுமதிக்கமாட்டார். ஆகவே குடும்பத்தில் பிரச்சினை ஏற்படாமல் ஒரு குறிப்பிட்ட நேரத்தைத் தொண்டு செய்வதற்காக ஒதுக்குங்கள். கணவர் வந்தால் அவரிடம் அனுமதி பெற்றுத் தொண்டு செய்யுங்கள். நம் செவ்வாடை இயக்கத்தில் பல பெண்களுக்கு இந்த மாதிரியான பிரச்சினைகள் உள்ளன. இடம், பொருள், ஏவல் அறிந்து புத்திசாலித்தனமாக நடந்துகொள்ள வேண்டும். உங்களுக்கும் கெட்ட பெயர் வரக்கூடாது. உங்களால் அம்மாவுக்கும், இயக்கத்திற்கும் கெட்ட பெயர் வராமல் பார்த்து நடந்துகொள்ளுங்கள். அதுவே நீங்கள் அம்மாவுக்குச் செய்யும் மிகப்பெரிய தொண்டு.

□□□

# நான் டாக்டரா? ...

## மருத்துவர்களின் ஆச்சரியம்

பிறகு நான் சென்னை சென்று அப்பல்லோ மருத்துவமனையின் இதய சிகிச்சைப் பிரிவில் சேர்ந்தேன். அங்கு டாக்டர் எனக்கு ஆஞ்சியோகிராம் எடுத்துப் பார்த்தார். ஆஞ்சியோகிராம் என்பது இரத்தக் குழாயில் எந்த இடத்தில் எந்த அளவு அடைப்பு என்பதைத் தெரிந்து கொள்ள உதவுவதாகும். அந்தச் சோதனையில் என் இதயத்து ரத்தக் குழாய்களில் எந்த அடைப்பும் இல்லை எனத் தெரிந்தது. சில நாட்களுக்கு முன் இதயத்து ரத்தக் குழாயில் அடைப்பு இருக்கிறது. உடனடியாக பைபாஸ் ஆபரேஷன் செய்ய வேண்டும் என்று சொன்ன டாக்டர்களுக்கு இப்போது அடைப்பே இல்லை என் சோதனையில் தெரிந்ததும் மருத்துவர்களுக்கு ஆச்சரியமாகப் போய்விட்டது. டாக்டர்கள் எனக்கு பைபாஸ் ஆபரேஷன் தேவை இல்லை எனச் சொன்னார்கள்.

## பைல்ஸ் ஆபரேஷன் செய்யுங்கள்

உடனே நான் அவர்களிடம் எனக்குப் பைல்ஸ் ஆபரேஷன் செய்யுங்கள் என்று கேட்டுக் கொண்டேன். பைல்ஸ் ஆபரேஷனா என்ன சார் சொல்றீங்க? என்று என்னை ஏளனமாகப் பார்த்துவிட்டுக் கேட்டனர். ஆமாம் சார் எங்கள் அம்மா மேல்மருவத்தூர் அடிகளார் பைல்ஸ் ஆபரேஷன் செய்து கொண்டு வா என்றுதான் சொன்னார்கள். தயவு செய்து அதே மாதிரி செய்யுங்கள் என்றேன்.

## நீங்கள் இப்படிக் கேட்பீர்கள்

அதற்கு அவர்கள் நாங்கள் டாக்டரா? அல்லது அவர் (அருள்திருஅம்மா) டாக்டரா என்று கேலியாகக் கேட்டனர். ஆனால் நான் "சார் நீங்கள் தான் டாக்டர். ஆனால் எங்கள் அம்மா அதற்குமேல் எவ்வளவோ அறிந்தவர்கள். அது மட்டுமல்ல சார். நீங்கள் இப்படிக் கேட்பீர்கள் என்பதையும் எங்கள் அம்மா அன்றே சொல்லிவிட்டார்கள்"என்று சிரித்துக்கொண்டே சொன்னேன். அவர்கள் தர்ம சங்கடமாக நெளிந்துகொண்டே இதை நம்புவதா வேண்டாமா என்று அவர்களுக்குள்ளே பேசிக்கொண்டார்கள்.

(தொடர்ச்சி..15ஆம்பக்கம்)

# நான் டாக்டரா?

## உடனே ஆபரேஷன் செய்ய வேண்டும்

சற்று நேரத்தில் அந்த டாக்டர்கள் சரி சார் இருங்கள் என்று என்னிடம் சொல்லிவிட்டு பைல்ஸ் நோய் நிபுணர் டாக்டர் ராமமூர்த்தியை வரும்படிச் சொல்லியனுப்பினர். பைல்ஸ் இருக்கிறதா உங்களுக்கு என்று முதலில் டெஸ்ட் செய்து பார்க்கிறோம் என்று டாக்டர்கள் சொன்னார்கள். டாக்டர் ராமமூர்த்தி வந்து என்னைச் சோதித்துப் பார்த்து ஆச்சரியப்பட்டுப் போனார். அவர் என்னிடம் நீங்கள் எப்படி இதன் வலியைப் பொறுத்துக் கொண்டிருக்கிறீர்கள். பெரிது பெரிதாக மூன்று பைல்ஸ் கட்டிகள் இருக்கின்றன. மிகப் பெரிதாக இருப்பதால் மிகவும் ஆபத்து. இதை உடனடியாக ஆபரேஷன் செய்ய வேண்டும்''என்றார்.

## ஆபரேக்ஷன் செய்துவிடுங்கள்

உடனே நான் சார் நான் பைல்ஸ் ஆபரேஷன் செய்து கொள்ளத்தான் தயாராக வந்திருக்கிறேன் செய்துவிடுங்கள்''என்றென். அவர் என்னைப் பார்த்து வியப்புடன் என்ன! பைல்ஸ்ஆபரேஷன் செய்து கொள்ளத்தான் தயாராக வந்திருக்கிறீர்களா? பைல்ஸ்தான் என்று உங்களுக்கு எப்படித் தெரியும் என்றார். நான் அதற்கு முன் நடந்தவைகள் அனைத்தையும் கூறினேன். இந்த இடத்தில் நான் ஒன்று குறிப்பிட வேண்டும். எனக்கு இதுவரை பைல்ஸ் உபாதை எதுவும் கிடையாது. வலியோ பைல்ஸின் எந்த அறிகுறியோ எனக்கு ஒருபோதும் இருந்ததில்லை.

## அனைத்தும் அறிந்த மகான்

எல்லாவற்றையும் கேட்ட டாக்டர் ராமமூர்த்தி, நான் மேல்மருவத்தூருக்கு வர வேண்டும் என்று நினைத்துக்கொண்டிருக்கிறேன். ஆனால் முடியவில்லை. என் மனைவி மூன்று முறை மருவத்தூர் சென்று குருவையும் கருவறை அன்னையையும் தரிசித்துவிட்டு வந்திருக்கிறார். அம்மாவின் (அடிகளாரின்) சக்தி பற்றி நிறையக் கூறியுள்ளார்கள். எனவே நீங்கள் கூறிய அற்புதங்கள் பற்றி எனக்குச் சந்தேகம் ஏதுமில்லை. நாங்கள் வேண்டுமானால் டாக்டராக இருக்கலாம். ஆனால் அருள்திரு அடிகளார் அவர்கள் நமக்கெல்லாம் மேலானவர். அனைத்தும் அறிந்த மகான். எனக்கு அவரைத் தரிசிக்கும் பாக்கியம் இதுவரை கிடைக்கவில்லை என்று கூறியவுடன் உடனிருந்த எல்லா டாக்டர்களும் ஒன்றும் புரியாமல் விழித்தனர்.

## அம்மாவைச் சென்று பார்த்தேன்

ஆபரேஷன் முடிந்து வீடு வந்தேன். மறுநாள் அருள்கூடம் சென்று அம்மா அவர்களைப் பார்த்தேன். அந்தப்படிக்கட்டுகளில் ஏறும்போதே என்னைப் பார்த்து அம்மா சிரித்துக்கொண்டே “என்ன நான் சொன்ன மாதிரியே நான் டாக்டரா உங்கள் அடிகளார் டாக்டரா? நாமென்ன டாக்டருக்கு படிச்சிருக்கிறோமா''என்று சொல்லிச்சிரித்தார்கள்.

## மருந்து சாப்பிடுகிறாயா?

நீ மருந்து மாத்திரைகளையெல்லாம் வாங்கி வந்து விட்டாயா? அவைகளை ஒழுங்காகச் சாப்பிடுகிறாயா? என்று கேட்டார்கள். அதற்கு நான் “அம்மா தாங்கள் மருந்து மாத்திரைகளை வாங்கி வா ஆனால் சாப்பிடாதே என உத்தரவு பண்ணினீர்களே அம்மா! ஆகையால் மாத்திரை மருந்துகளைச் சாப்பிடவில்லை''என்றேன். உடனே அம்மா அவர்கள் “அதானே பார்த்தேன் நீ எங்கே மாத்திரை சாப்பிட்டுவிட்டாயோ என்று சந்தேகப்பட்டுக் கேட்டேன். எந்த மருந்தும் சாப்பிடாதே''என மீண்டும் கூறி ஆசி வழங்கினார்கள்.

## மனதில் தோன்றிய சந்தேகங்கள்

1) டாக்டர் எழுதிக் கொடுத்த மாத்திரை மருந்துகளை ஏன் சாப்பிடக்கூடாது?
2) மருந்துதான் சாப்பிடவேண்டியதில்லையே பிறகு ஏன் வீணாகப் பணம் செலவு செய்து வாங்க வேண்டும்?
3) பைபாஸ் ஆபரேஷன் தேவையில்லை. இனி உன் உடம்புக்கு ஒன்றுமில்லை என்று கூறிய அம்மா பைல்ஸ் ஆபரேஷன் பண்ணிக்கொள்ளச் சொன்னதேன்?

## மனம் ஏற்கும் தெளிவுகள்

- நோய் குணமானது ஆபரேஷனாலோ மருந்தினாலோ அல்ல. அம்மாவின் அருள் பார்வையால் குணமானது. எனவே நோயற்ற நல்ல உடம்புக்கு மாத்திரை, மருந்து சாப்பிடத் தேவையில்லை.
- நாம் செலவு செய்ய வேண்டியது முன்வினைப் பயன். அதைச் செலவழித்துத்தான் ஆக வேண்டும். அந்தப் பணம் யாருக்குப் போய்ச் சேர்ந்தாக வேண்டுமோ அப்படியே அவர்களுக்குச் சேர்ந்தேயாக வேண்டும்.
- பைல்ஸ்(மூலம்) ஆபரேஷன் செய்துகொள்ளச் சொன்னது ஏன் என்றால் என் உடலில் கத்திப்பட்டே ஆக வேண்டும் என்பது விதி. அதை இதயத்துக்கருகிலே படாமல் வேறு இடத்திற்கு மாற்றி, மூலத்துக்காக மாற்றி அமைத்தது அம்மாவின் கருணை.

என் வாழ்வில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தோடு அன்னையின் இந்த அருள்வாக்கை நினைத்துப் பார்க்கிறேன்.

“மகனே! உன்னுடைய விதியையும் மாற்றி அமைக்கும் சக்தி எனக்குண்டு. ஆனால் விதிப்படி நடக்கட்டும் என நானே வகுத்த கருமச் சட்டத்தில் தலையிடுவதில்லை''.

# Divine Miracles at Melmaruvathur

## You are a soul who committed suicide in your earlier birth:

A devotee from Maduranthakam ran a cinema theatre and dealt in timber. His family was devoted to Mother. They had a family problem. They decided to perform their daughter's marriage when a proposal from a good groom was received. However the girl was determined to study medicine and hence was not interested in getting married.. The vexed parents finally convinced their daughter that they should consult Mother and Her decision would be implemented. The girl agreed and they reached Maruvathur for divine revelation.

Mother told the father, "My son! Perform your daughter's marriage immediately. You may go!" The parents were delighted. But the girl was disappointed and said, "Mother! I had a mountain of faith in you. But you have let me down badly by destroying my ambition. Why?" Mother said, "Daughter, you do not know what is good for you. Only Mother knows. Get married!" The girl pleaded, "Mother, I am only trying to become a doctor and serve people as you always advise". Mother replied, "Daughter, You are a soul who committed suicide in your previous birth because you could not get married. When you have come to me it is my duty as a Mother to see that you get married. First get married. We shall then see about your education. I shall always be with you in your life and protect you."

***

## மேல்மருவத்தூர் அன்னையின் அருள்வாக்கு

### உனது இறுதி நாட்களில்

"ஆன்மாவை அடிக்கடி தட்டிக் கொடுத்தபடி இருக்க வேண்டும். அது நிம்மதியோடும், அமைதியோடும், நல்ல பெயரோடும் போய்ச் சேர வேண்டிய இடத்தில் போய்ச் சேர வேண்டும்."

### ஆன்மா ஒன்றுதான்!

"மனித இனம் மிருக இனமாக மாறி வருகிறது. மனிதர்கள் தான் நல்லவர்கள், கெட்டவர்கள் என்று பிரிக்கிறீர்கள். பெயர் வைக்கிறீர்கள். அவர்கள் எல்லோரும் ஆன்மாக்களே! ஆன்மாதான் அவர்களை ஆட்டுவிக்கிறது.
ஆன்மா என்னுள் அடக்கம். அதில் ஆணவம் இருக்கும். ஆணவம் இருந்தால் ஆசை இருக்கும். ஆசை இருந்தால் அழிவும் உண்டு.

### அம்மாவை அடைய முடியும்

"எட்டாத ஒரு பொருளை எடுக்க முயற்சிக்கும்போது ஐம்புலன்களும் ஒருமுகப்படுத்தி முயற்சி செய்கிறோம். அதுபோல ஐம்புலன்களையும் அடக்கி ஆன்மாவை ஒருமுகப்படுத்தி முயற்சி செய்தால் அம்மாவை அடைய முடியும்."

### ஆன்மா வெளியேறும்

"பலூனில் அடைக்கப்பட்ட காற்று நம்மையறியாமலேயே கொஞ்சம் கொஞ்சமாக வெளியேறுவதுபோல, உங்களை அறியாமலே உங்கள் ஆன்மா உங்களை விட்டு வெளியேறும்."

### மனிதனுக்கு ஆன்மா

"ஆலயத்தில் தெய்வம் இருக்கிறதோ, தெய்வம் ஆலயத்தில் இருக்கிறதோ அது பற்றிக் கவலை இல்லை. மனிதனுக்கு ஆன்மா இருந்தால் போதும்."

குருவடி சரணம்! திருவடி சரணம்!!

ஓம் சக்தியே! ஆதிபராசக்தியே!



# ஆதிபராசக்தி சித்தர்பீடம் - மேல்மருவத்தூர்

## ஆலய சிறப்பு விழாக்கள்

## 2017 - ஸ்ரீ துர்முகி வருடம்

| | | | | |
|---|---|---|---|---|
| மாசி | 19 | 03.03.2017 | வெள்ளி |  ஆன்மிககுரு அருள்திரு அம்மா அவர்களின் 77ஆவது அவதாரப் பெருமங்கள விழா |
| மாசி | 28 | 12.03.2017 | ஞாயிறு | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| பங்குனி | 14 | 27.03.2017 | திங்கள் | **அமாவாசை - வேள்வி** |
| பங்குனி | 16 | 29.03.2017 | புதன் | **தெலுங்கு வருடப்பிறப்பு** |
| பங்குனி | 28 | 10.04.2017 | திங்கள் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |

## 2017 - ஸ்ரீ ஹேவிளம்பி வருடம்

| | | | | |
|---|---|---|---|---|
| சித்திரை | 01 | 14.04.2017 | வெள்ளி | தமிழ்ப் புத்தாண்டு |
| சித்திரை | 13 | 26.04.2017 | புதன் | **அமாவாசை - வேள்வி** |
| சித்திரை | 27 | 10.05.2017 | புதன் | **சித்திரைப் பௌர்ணமி - வேள்வி பெருவிழா** |
| வைகாசி | 11 | 25.05.2017 | வெள்ளி | **அமாவாசை - வேள்வி** |
| வைகாசி | 26 | 09.06.2017 | வெள்ளி | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| ஆனி | 09 | 23.06.2017 | வெள்ளி | **அமாவாசை - வேள்வி** |
| ஆனி | 24 | 08.07.2017 | சனி | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| ஆடி | 07 | 23.07.2017 | ஞாயிறு | **அமாவாசை - வேள்வி** |
| ஆடி | 10 | 26.07.2017 | புதன் | **சித்தர் பீடத்தில் 46ஆவது ஆடிப்பூர விழா** |
| ஆடி | 11 | 27.07.2017 | வியாழன் | **சித்தர் பீடத்தில் 46ஆவது ஆடிப்பூர விழா** |
| ஆடி | 22 | 07.08.2017 | திங்கள் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| ஆவணி | 05 | 21.08.2017 | திங்கள் | **அமாவாசை - வேள்வி** |
| ஆவணி | 20 | 05.09.2017 | செவ்வாய் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| புரட்டாசி | 03 | 19.09.2017 | செவ்வாய் | **அமாவாசை - வேள்வி** |
| புரட்டாசி | 04 | 20.09.2017 | புதன் | **சித்தர் பீடத்தில் நவராத்திரி பெருவிழா ஆரம்பம்** |
| புரட்டாசி | 19 | 05.10.2017 | வியாழன் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| ஐப்பசி | 02 | 19.10.2017 | வியாழன் | **அமாவாசை - வேள்வி** |
| ஐப்பசி | 17 | 03.11.2017 | வெள்ளி | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| கார்த்திகை | 02 | 18.11.2017 | சனி | **அமாவாசை - வேள்வி** |
| கார்த்திகை | 17 | 03.12.2017 | ஞாயிறு | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| மார்கழி | 02 | 17.12.2017 | ஞாயிறு | **அமாவாசை - வேள்வி** |
| மார்கழி | 10 | 25.12.2017 | திங்கள் | கிறிஸ்மஸ் |

## அன்னையின் அருள்வாக்கு

| |
|---|
| **ஆண்டுக்குப் பலன் இருப்பதை விட வேண்டுதலுக்குப் பலன் உண்டு.** |
| தத்துவங்களை இனிப்பாகப் பேசலாம்.<br>ஆனால் பத்து பேர் ஒன்று சேர்ந்து வழிபாடு செய்வதால் பயன்உண்டு. |
| **மனத்தில் ஏற்படும் பொறாமைதான் கண் திருஷ்டியாக மாறுகிறது.<br>எதற்கும் மனம் உடையக்கூடாது.** |
| வாள்வீச்சு, சொல் வீச்சு என்பதெல்லாம் எடுபடாது. உள்ளத்தில் உண்மை வீச்சு இருக்கவேண்டும். |
| **உங்கள் சொல்லும், செயலும் ஒன்றாக இல்லாதபோது,<br>வேதனைகளும்,சோதனைகளும் வரத்தான் செய்யும்.** |
| கஷ்டங்கள் வரும்போதெல்லாம் மந்திரநூல் படி! எல்லாவற்றையும் உருவேற்று! |
| **அம்மா…அம்மா..என்று பாசத்தோடு இங்கே வரணும்!<br>இது நம் தாய் வீடு என்று நெனச்சிக்கிட்டு வரணும்!** |
| தருமம் இரத்தத்தில் ஊறிவிட்ட குணமாக இருக்க வேண்டும். |

# ஆன்மிக நாட்குறிப்பு

(அவுஸ்திரேலிய நேரம்)

## 2017

| | | | | |
|---|---|---|---|---|
| 02.03.2017 | வியாழன் | மாசி | 18 | சதுர்த்தி விரதம் |
| 03.03.2017 | வெள்ளி | மாசி | 19 | ஆன்மிககுரு அருள்திரு அம்மா அவர்களின் 77ஆவது அவதாரதப் பெருமங்கல விழா |
| 04.02.2017 | சனி | மாசி | 20 | ஷஷ்டி விரதம், கார்த்திகை விரதம் |
| 08.03.2017 | புதன் | மாசி | 24 | ஏகாதசி விரதம் |
| 10.03.2017 | வெள்ளி | மாசி | 26 | பிரதோஷ விரதம் |
| 11.03.2017 | சனி | மாசி | 27 | மாசிமகம் |
| 12.03.2017 | ஞாயிறு | மாசி | 28 | **பூரணை விரதம் - பௌர்ணமி திருவிளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் - மெல்போர்ண்<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு அன்னை ஆதிபராசக்தி சித்தர் பீடம் நியுசவுத்வேல்ஸ் மன்றம் - சிட்னி<br>மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி சென்டர்<br>ஆதிபராசக்தி மன்றம் மெல்போர்ண் அவுஸ்திரேலியா (AMMA) |
| 16.03.2017 | வியாழன் | பங்குனி | 02 | **சங்கட சதுர்த்தி** |
| 24.03.2017 | வெள்ளி | பங்குனி | 10 | **ஏகாதசி விரதம்** |
| 25.03.2017 | சனி | பங்குனி | 11 | சனிப்பிரதோஷ விரதம் |
| 28.03.2017 | செவ்வாய் | பங்குனி | 14 | **அமாவாசை விரதம்** |
| 31.03.2017 | வெள்ளி | பங்குனி | 17 | சதுர்த்தி விரதம் - கார்த்திகை விரதம்<br>கொடியேற்றம் - சிட்னி முருகன் கோயில்<br>கொடியேற்றம் - சிவா-விஷ்ணு கோவில் - கரம்டவுன்ஸ் - மெல்போர்ண் |
| 10.04.2017 | திங்கள் | பங்குனி | 27 | **பூரணை விரதம் - பௌர்ணமி திருவிளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் - மெல்போர்ண்<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு அன்னை ஆதிபராசக்தி சித்தர் பீடம் நியுசவுத்வேல்ஸ் மன்றம் - சிட்னி<br>மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி சென்டர் |
| 14.04.2017 | வெள்ளி | சித்திரை | 01 | ஹேவிளம்பி வருடம் - தமிழ் சித்திரை வருடப்பிறப்பு |
| 16.04.2017 | ஞாயிறு | சித்திரை | 03 | ஆதிபராசக்தி மன்றம் மெல்போர்ண் அவுஸ்திரேலியா (AMMA) |
| 21.04.2017 | வெள்ளி | சித்திரை | 08 | கொடியேற்றம் - வக்ரதுண்ட விநாயகர் ஆலயம் - பேசின் |

## குருவின் அவசியம்

“மரம் செடி கொடிகளில் கூட வயதானவை உண்டு.

காட்டு விலங்குகட்கும் தலைவன் உண்டு. அதுவே அக்கூட்டத்தை வழி நடத்தும்.

தேனீக்களிலும் கூட ராணி தேனீ, ராஜா தேனீ, வேலைக்காரத்தேனீ என உண்டு.

செம்மறியாடுகளும் ஒரு ஆடு முன்னே போனால் அதனைத் தொடர்ந்து கூடவே போகும்.

யானையும் கூட்டத்தோடும் தலைவனோடும் வாழ்கிறது.

அதுபோல ஆன்மிகத்திலும் உங்கட்கு ஒரு குரு தேவை.
ஒரு குருவை ஏற்றுக்கொண்டு வாழ வேண்டும்.

குரு என்று ஒருவரை ஏற்றுக்கொண்ட பிறகு அவரை ஆராய்ச்சி செய்யக்கூடாது.
அவர் அப்படி இப்படி என்று எடைபோடக்கூடாது.
தெய்வத்தையும் குருவையும் ஆராய்ச்சி செய்யக்கூடாது.”